# மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலம்; வெற்றித் திருவிழாக் காலம்!



தமிழ்முகத்தில்
வெற்றிமலர் புன்னகைக்கிறது
தமிழ்மனத்தில்
ஆயிரம் விளக்குகள் ஏற்றி வைக்க
வானம்
நட்சத்திரங்களை அழைத்து வருகிறது
கடல்களின்
அலைகளில் வாகைப்
பரணிப் பாடல்கள் முழங்குகின்றன.

தமிழ்நாட்டுச்
சட்டப்பேரவைக்கு எதிராகச்.
சாட்டை தூக்கியவன்
உச்ச நீதிமன்றத்தால் தூக்கி எறியப்பட்ட
வரலாற்றை
வைகறை
கண்ணிமைக்காமல்
படிக்கிறது
அந்தி
ஸ்டாலினுக்கு அணிவிக்க
செவ்வாடை ஏந்தி வருகிறது.

மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலம்
திக்குகள் இதயத்தில் வெற்றிக்
கல்வெட்டுகள்
செதுக்கும்
திருவிழாக் காலம் !

மக்களாட்சியின்
மாபெரும் வெற்றிக்குப்
பச்சைக் கொடி அசைத்து
உச்சநீதிமன்றம் இசைவு தந்துள்ளது
மக்கள் அரசுக்கு
மரியாதை முரசுகொட்டியுள்ளது.

தாமதிக்காமல்
கிடப்பில் ஆளுநர் போட்டிருந்த
தமிழகச் சட்டப்பேரவையின்
சட்டமுன்வரைவுகளை
உச்சநீதிமன்ற மே சட்டென்று
சட்டமாக்கி உள்ளது.
தள்ளிப் போகும் நீதி
தவிர்க்கப்பட்ட நீதியென அறிவதல்லவா
நீதித் தராசின் அடையாளம்!

தமிழகச் சட்டப் பேரவையின்
உச்சி குளிர மலர்கள் தூவிய
உச்சநீதிமன்றம்
முட்டுக் கட்டை மண்டைமேல்
என்ன கொட்டியதோ
யாரே அறிவார்!



கவிப்பேருவி
**ஈரோடு தமிழன்பன்**



இராணிப்பேட்டை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி தலைமையில் நடந்த பொதுமக்கள் தாகம் தீர்க்கும் வகையில் குடிநீர் பந்தலை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர் காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, நகராட்சி தலைவர் சுஜாதா விநோத், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் இசட். அப்துல்லா மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காரைக்குடியில்

# 10க்கும் மேற்பட்ட அறைகளுடன் சுற்றுலா மாளிகை!

## கோரிக்கையினை அரசு பரிசீலிக்கும்! பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, ஏப்.14 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**மாங்குடி:** எனது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட காரைக்குடி, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாநில நெடுஞ்சாலையில் SH 158 கோட்டையூர் ரீ ராமபுரம் Railway Gate LC 411 பகுதியில் மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்கு நில எடுப்பு ஏற்பாடுகள் எல்லாம் நிறைவுபெற்று, பணி இன்னும் துவக்காமல் இருக்கப்பெறுகிறது. அது எப்போது துவக்கப்படும் என்பதையும், அதே போன்று, காரைக்குடி மானாமதுரை ரயில் பாதையில், காரைக்குடியிலிருந்து அரியக்குடி, இலுப்பக்குடி செல்லும் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். அதற்கான பணிகள் எப்போது துவக்கப்படும்?



அதேபோல, காரைக்குடி என்பது ஒரு மாநகராட்சிப் பகுதி. இந்தப் பகுதியில் ஏராளமான முக்கியமான விருந்தினர்கள் எல்லாம் வரக்கூடிய பகுதி. மாண்புமிகு தமிழக முதலவர் அவர்கள் வந்திருக்கும்போதுகூட, அங்கிருக்கிற அழகப்பா பல்கலைகழக விடுதியில் விருந்தினர் மாளிகையில்தான் தங்கியிருந்தார்கள். ஆகவே, காரைக்குடி பகுதியில் 10க்கு மேற்பட்ட roomகளுடன் சேர்த்து ஒரு விருந்தினர் மாளிகை அமைக்கப்படுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்கிற பைபிள் வாசகம்தான் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தால், ஒரு பாலத்தைகூட, ஒரு road கொடுங்கள் என்பதெல்லாம் இல்லை. என்னிடத்தில் நேருக்கு நேர் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் தொகுதிக்கு வேண்டிய பல பணிகளை கேட்கிறார்கள். ஏனென்றால், இந்த ஆட்சியில் கிடைக்கும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. இப்படி ஒரு கொடுக்கப்படுகிற கடிதம், சா. மாங்குடி அவர்களும் என்னிடம் நேரடியாக கொடுத்திருக்கிறார்கள்.

துறை சார்பாக முதலிலே ஒரு கடிதம் கொடுத்தால், துறைக்கு அனுப்பி இது fit ஆக இருக்கிறதா, இதை எடுத்துக்கொள்ளலாமா என்று அளவில் சொல்கிறார்கள். அதன் பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்கிற போது, DPR தயார் செய்கிறோம். DPR தயார் செய்தபின், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பணம் ஒதுக்கப்பட்டு, tender கோரப்படுவதுதான் procedure. இது ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னால் இருப்பவர்களும் சரி, பின்னால் இருப்பவர்கள் கொடுக்கப்படும் கடிதங்கள் எல்லாம் துறைக்கு நான் அனுப்பியிருக்கிறேன். ஒன்றன்பின் ஒன்றாக நிதிநிலைமைக்கேற்ப இந்தப் பணிகள் நடைபெறுகிறது.

மாங்குடியைப் பொறுத்த வரையில், எனக்கு கொடுத்திருக்கிற கடிதங்கள் எல்லாம், DPR -க்கு அனுப்பியிருக்கிறேன். அவை வந்தவுடனே எவையெல்லாம் செய்ய முடியும் என்பதை நான் கடிதம்மூலம் உங்களுக்கு பதில் தருகிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### மரக்காணம் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் – மறைந்த

# சரவணன் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி - குடும்பத்துக்கு நிதியுதவி!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கி ஆறுதல்!

திண்டிவனம், ஏப் 14 - உடல் நலக்குறைவால் மறைவெய்திய மரக்காணம் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் சரவணனின் திருவுருவப் படத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்து குடும்பத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 1 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கி குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றியம் எண்டியூரில் உடல் நலக்குறைவால் மறைவெய்திய மரக்காணம் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் சரவணனின் திருவுருவப்படம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உடல் நலக்குறைவால் உயிரிழந்த ஒன்றிய துணை செயலாளர் சரவணனின் திருவுருவப்படத்தை திறந்துவைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்துஉயிரிழந்த மரக்காணம் மேற்கு ஒன்றிய துணை செயலாளர் சரவணனின் குடும்பத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 1 லட்சம் ரூபாய் நிதி உதவியை வழங்கி குடும்பத்திற்கு அவர் ஆறுதல் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர கழக செயலாளர் ஆசிரியர் கண்ணன் மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை ,ஒன்றிய கழக நிர்வாகிகள் குமார், மீனா குமாரி, முருகன், ஆதி கேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ் ,ஒன்றிய கவுன்சிலர் திருநாவுக்கரசு, கிளைக் கழக செயலாளர்கள் கருணாநிதி, ஜெயச்சந்திரன், அருள்குமரன், மானூர் சிவக்குமார், இறையனூர் பத்மநாபன், கீழ்எடையாளம் பாலசுந்தரம், மொளசூர் முருகன். நிர்வாகிகள் செங்கேணி தனுசு தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் அறிக்கை!

நெல்லை.ஏப்.14-

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்தநாள் விழா நிகழ்வை முன்னிட்டு நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலைக்கு இன்று 14 ம்தேதி காலை 9.30 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.



ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கை ஒடிக்க புரட்சி செய்த புத்துலக புத்தர்; சமத்துவத்தை நோக்கிய போராட்ட பயணத்தில் வடக்கு கண்ட பெரியார் புரட்சியாளர் பாபா சாகேப் டாக்டர்.அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்தநாள் இன்று (14.04.2025 திங்கள் கிழமை) கொண்டாடப் படுகிறது.

இதையொட்டி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று காலை 9.30 மணியளவில் நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்யப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து "சமத்துவ உறுதிமொழி"எடுக்கப்படுகிறது

இந்நிகழ்வில் மாவட்ட, மாநில, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர் கள்,நிர்வாகிகள்,கழக முன்னோடிகள்,கழக உடன்பிறப்புகள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்டத்தில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.ஏப்.14-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் புரட்சியாளர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று 14 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல்

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்' என தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110 ன் கீழ் அறிவித்து.அதனை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்து "சமத்துவ நாள் உறுதி மொழி" ஏற்றுக்கொண்டு வரப்படுகிறது.

அதன்படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று 14 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படுகிறது.அதனைத் தொடர்ந்து "சமத்துவ உறுதிமொழி" ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஆகவே நிகழ்வில் மாநில, மாவட்ட, நிர்வாகி'கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர,பேரூர்,கழகச் செயலாளர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள்,அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் கழக தொண்டர்கள்,மூத்த முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி தெற்கு மாவட்டத்தில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!



தென்காசி.ஏப்.14-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்தநாள் முன்னிட்டு தென்காசி குத்துக்கல்வலசை சிவந்திநகரில் உள்ள தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் இன்று 14 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்ப தாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் இன்று 14 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து "சமத்துவ உறுதிமொழி" ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஆகவே நிகழ்வில் மாநில, மாவட்ட, தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள்,மூத்த முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ராமநாயக்கன்பேட்டை கிராமத்தில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழுக்கான BLA2, BLC மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஹபிஸ்யுல்லா, தே.பிரபாகரன், டி.தேவராஜ், ஒன்றிய நிர்வாகிகள் தர்மராஜன், பொன்னுசாமி, கிருஷ்ணமூர்த்தி, பவித்ரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மரக்காணம் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் மற்றும் மரக்காணம் பேரூர் கழகத்திற்கு உட்பட்ட பாகமுகவர்கள் மற்றும் கிளை கழக நிர்வாகிகள்கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் மரக்காணம் மத்திய ஒன்றியம் சிறுவாடி முருக்கேரியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.உடன் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஜாபர் அலி,மாவட்ட பொருளாளர் ரமணன், துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் தயாளன், பழனி, ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.